
## திராவிடத்தால் வாழ்கிறோம்

978

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

31

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## இந்தி எதிர்ப்பு கொடி பிடித்த மேயர் அப்துல் காதர்!

தி.மு.கழகம் உருவான காலத்தில் இருந்தே, தமிழ்நாடெங்கும் ஆயிரக்கணக்கான சிறுபான்மைச் சமூகத் தோழர்கள் உடன் பிறப்பாக உழைத்துள்ளனர். முகம் தெரியாத, முகவரி அறியப்படாத அவர்களில் முத்துக்களாக ஆங்காங்கே, தன் உழைப்பால் மிளிர்ந்தவர்களும் உண்டு. அவர்களில் இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் உடன் நின்ற அப்துல் காதரும் ஒருவர். திராவிடர் கழகத்தில் பிளவு ஏற்பட்டிருந்த சமயத்தில், சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் 27-06-1949 மாலை 6-30 மணிக்கு அண்ணா சாலை மீரான் சாயபு தெரு, எண் 10-வது இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்களில் அப்துல் காதரும் ஒருவர். பங்கேற்றது மட்டுமல்ல, தன் கருத்துகளையும் பகிர்ந்துகொண்டார்.

1960-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1962-இல் விலைவாசி உயர்வுப் போராட்டம், அதனால், 2 மாத சிறைத்தண்டனை என தி.மு.கழகத்தின் தொடக்கக்கால எழுச்சியில் ஓர் அங்கமாக இருந்தவர் அப்துல் காதர். அவருக்கான வாய்ப்பையும், அங்கீகாரத்தையும் தி.மு.கழகம் சந்தித்த முதல் உள்ளாட்சித் தேர்தலிலேயே வழங்கினார் அண்ணா.

1959-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில்தான் தி.மு.கழகம் முதன்முறையாகப் போட்டியிட்டது. தமிழ்நாடெங்கும் தி.மு.கழகத்தினர் பரவலாக வெற்றி பெற்றனர். சென்னை, மாநகராட்சி மன்றத்தில் காங்கிரஸ் 37 இடங்களை மட்டுமே வென்றது. தி.மு. கழகமோ 45 இடங்களில் வெற்றி பெற்று மாநகரைக் கைப்பற்றியது. அதற்காக, சென்னை மாவட்ட தி.மு.க. சார்பாக, கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அறிஞர் அண்ணா, "சென்னை மாநகராட்சி மன்ற நிர்வாகப் பொறுப்பை, தி.மு.கழகம் ஏற்கத்தான் வேண்டுமா? வேண்டும் என்று விரும்புபவர்கள் மட்டும் 'ஆம்' என்று கூறிக் கரம் உயர்த்துங்கள்!" என்றார். அங்கு கூடியிருந்த மூன்று இலட்சம் பேர் 'ஆம்' என்றனர்.

### மக்கள் குரலே மகேசன் குரல்!

"மகிழ்ச்சி அடைகிறேன், மக்கள் குரல்தான் மகேசன் குரல்" எனக்கூறி நீண்ட உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. "மாநகராட்சியில் என்னுடைய தோழர்கள் மேயராகும்போது வெளிநாட்டு பிரமுகர்கள் வருகையில், 'இவர்தான் மதறாஸ் மேயர்' என்று சொன்னவுடன், கைகுலுக்கிக் கொண்டே, நம் தோழர் என்ன சொல்வார்? மற்ற கட்சி மேயராக இருந்தால், 'எனக்கிருக்கும் மோட்டார் கார் ரோல்ஸ்ராய்ஸ் கார்' என்று சொல்லக்கூடும். 'நான் இருப்பது மூன்றடுக்கு மாளிகை' என்று சொல்லக்கூடும். 'அடுத்த ஆண்டு நான் அமெரிக்கா வர இருக்கிறேன்' என்று கூறக்கூடும். என்னுடைய கழகத் தோழர்கள் அமெரிக்கத் தூதர் கரத்தையோ அல்லது ரஷிய நாட்டு இராஜதந்திரி கரத்தையோ குலுக்குகின்ற நேரத்தில், 'ஈஸ் ஹி த மேயர் ஆஃப் மெட்ராஸ்?' என்று கேட்டால், 'அண்டு ஐ பிலாங் டு டி.எம்.கே. பார்ட்டி' என்று பதில் சொல்லுவார். இந்தச் செய்தி மாஸ்கோவுக்குச் செல்லும் - அமெரிக்காவுக்குச் செல்லும்" என்றார்.

### மேயர் அப்துல் காதர்

அப்படி, தி.மு.கழகத்தின் சார்பில் சென்னையின் முதல் மேயராக அ.பொ. அரசு, தேர்வுசெய்யப்பட்டிருந்தாலும், அவ்வாண்டு நவம்பர் மாத இறுதியில், அரசிடம் தொடர்ந்து போராடினார். நிதிப்பற்றாக்குறையைக் காரணம்காட்டி, அரசு செயல்படுத்தவில்லை. முந்தைய காலங்களில் எல்லாம் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினால், எல்லா கேள்விகளுக்கும் மேயர்களுக்குப் பதில் தெரிந்திருக்கும் என்று சொல்ல முடியாது. அதிகாரிகளிடம் உடனுக்குடன் கேட்டு விளக்கமளிப்பார்கள். ஆனால், அப்துல் காதர் எந்த விவாதம் என்றாலும் துணிச்சலாக எதிர்கொண்டார்.


கூவத்தில் படகு சவாரி செய்யும் கலைஞரும் உடன்பிறப்புகளும்...

எம்.எஸ்.அப்துல் காதர் என்ற சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவரை மேயராக்கினார் அண்ணா. அந்த மகத்தான சாதனையை நிகழ்த்தியதில், முத்தமிழறிஞர் கலைஞருக்கும் முக்கிய பங்கு உண்டு. '90 இடங்களில் போட்டியிட வேண்டாம்' என்று அண்ணாவே தயங்கிய போதும், "நான் பார்த்துக்கொள்கிறேன் அண்ணா" என்று நம்பிக்கை அளித்து, களத்திலும் உழைத்து வெற்றியை வசப்படுத்தியவர் கலைஞர். அதற்காக கடற்கரைக் கூட்டத்தில், அண்ணா, கலைஞருக்கு தங்க மோதிரம் அணிவித்து வாழ்த்தினார் என்பதும் வரலாறு.

30-11-1959 அன்று கூட்டப்பட்ட சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில், எம்.எஸ். அப்துல் காதர் முறைப்படி மேயராகப் பதவியேற்றார். என்.எஸ்.தேவராசன் துணை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அப்துல் காதருக்கு வயது 29. துடிப்பான இளம் வயது என்பதால், மாநகரின் முன்னேற்றத்தில் சிறு சிறு விஷயங்களில் கூட உன்னிப்பாக கவனம் செலுத்தினார் அப்துல் காதர். அப்போது மாநகராட்சியின் குப்பை வண்டிகள், சேகரித்த குப்பைகளைப் பத்திரமாக எடுத்துச் செல்லும்போது, வழியெங்கும் சிதறிக் கிடப்பது அன்றாடக் காட்சி. அதேபோல இறைச்சிகளும் அப்படியே வெளிப்படையாக எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றையெல்லாம் இனி நைலான் வலை போட்டுத்தான் எடுத்துச் செல்ல வேண்டுமென்று விதிமுறைகள் வகுத்தார் அப்துல் காதர்.

அதேபோல, கூவத்தின் முகத்துவாரத்தில் மணல் திட்டு உருவாகி, நீர்வழிப்பாதையில் தண்ணீர் தேங்கும் சூழல் உருவானது. அதனால், தண்ணீர் அசுத்தமாகி, துர்நாற்றம் வீசத் தொடங்கியது. அந்த மணல் மேட்டை அகற்ற வேண்டுமென்று அன்றைய காமராசர்

> அந்தப் போராட்டத்திற்கு அண்ணாவால் அறிவிக்கப்பட்டவர் மேயர் அப்துல் காதர். அவரிடம்தான் முதல் கருப்புக் கொடியையும் அண்ணா வழங்கினார்.

### இந்தி எதிர்ப்பு கருப்புக் கொடி!

அப்துல் காதர் மேயராக இருந்த காலத்தில், 1960-ஆம் ஆண்டு மீண்டும் இந்தி ஆதிக்கம் எட்டிப்பார்த்தது. "இந்தி ஆட்சிமொழியாக வந்தே தீரும், அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்க வேண்டும்" என்று 1960-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் அறிவித்தார். 18-06-60, 19-06-60 ஆகிய இரண்டு நாட்கள் குமாரபாளையத்தில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு, 'குடியரசுத் தலைவரின் அறிவிப்பு, தென்னக மக்களுக்கும் தி.மு.கழகத்திற்கும் விடப்பட்ட ஓர் அறைகூவல் என்று இந்தப்பொதுக்குழு கருதுகிறது. குடியரசுத் தலைவர் ஆகஸ்டு 30-ஆம் நாளுக்குள் அந்த அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டும்' என்று வலியுறுத்தியது. இல்லாவிட்டால், நாடெங்கும் ஊர்வலம், கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் எச்சரித்தது. போராட்டக் குழுவின் தலைவராக ஈ.வெ.கி.சம்பத், உறுப்பினர்களாக கலைஞர், பேராசிரியர் உட்பட 16 பேர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் எதிர்ப்புகளை மீறி, ஆட்சி மொழிக்கான ஆணைகள் வந்தன. போராட்டக் குழுவின் சார்பில், குடியரசுத் தலைவருக்கு, தி.மு.க. பொதுக்குழுவின் முடிவுகளை விளக்கி, குழுத்தலைவரான ஈ.வி.கே. சம்பத் கடிதம் அனுப்பினார். 17-7-1960-இல் போராட்டக்குழு கூடி, இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்த முடிவு செய்தது. அந்த சமயத்தில் குடியரசுத் தலைவர் சென்னை வருவதாக இருந்தது. 30-7-1960-இல் கூடிய தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவருக்கு, கருப்புக்கொடி காட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கருப்புக் கொடி காட்டும் முடிவு குறித்து பேசிய அண்ணா, "கருப்புக் கொடி காட்டுகிற நேரத்தில், குடியரசுத் தலைவரைத் திரும்பிப் போ என்று எவரும் சொல்லக்கூடாது; 'இந்தி ஒழிக'! கட்டளையைத் திருப்பிப் பெறுக!" என்று மட்டும்தான் முழங்க வேண்டும். குடியரசுத் தலைவர் செல்லும் காரின் மீது எவரும் எதையும் எறியக்கூடாது; அவர் தங்கியிருக்கும் கட்டடத்துக்கு அருகில் எவரும் செல்லக் கூடாது" என்றெல்லாம் அறிவுறுத்தி, போராட்டக் குழுவினருக்கு, கருப்புக் கொடிகளை தாமே வழங்கினார். அந்தப் போராட்டத்திற்கு அண்ணாவால் அறிவிக்கப்பட்டவர் மேயர் அப்துல் காதர். அவரிடம்தான் முதல் கருப்புக் கொடியையும் அண்ணா வழங்கினார்.

...நீளும்

## பா.ஜ.க. விசாரணைக் குழு மர்மம்!

கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக பா.ஜ.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் நோக்கம் குறித்து வி.சி.க. துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக சமூக வலைதளப் பக்கத்தில் அவர் எழுதியுள்ள பதிவில், "உ.பி. கும்பமேளாவில் கூட்ட நெரிசலில் அப்பாவி மக்கள் மரணித்த கோரச்சம்பவம் குறித்து விசாரணை குழு அமைக்காத பா.ஜ.க., தமிழ்நாட்டுக்கு மட்டும் அமைத்தது ஏன்? பா.ஜ.க. ஆளாத மாநில அரசுகளை பிளாக்மெயில் செய்யவா?


வன்னி அரசு,
துணைப் பொதுச் செயலாளர்,
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி.

இதேபோல்தான் கடந்த 2022-ஆம் ஆண்டு, தஞ்சை-மைக்கேல்பட்டி லாவண்யா தற்கொலை செய்த வழக்கை முன்வைத்து, கட்டாய மதமாற்றம் செய்ததாக கத்தோலிக்க கிறித்தவ பள்ளி மீது அபாண்டமான குற்றம் சுமத்தியது. இதை விசாரிக்க அன்றைக்கு பா.ஜ.க.விலிருந்த நடிகை விஜயசாந்தி உள்ளிட்டோர் அடங்கிய குழுவை அனுப்பினார் அதன் தேசிய தலைவர் ஜே.பி. நட்டா.

விசாரணை செய்த விஜயசாந்தி உள்ளிட்ட குழு ஊடகவியலாளர்களை சந்தித்து, "கட்டாய மதமாற்றத்தால்தான் லாவண்யா மரணித்தார்" என பா.ஜ.க. தலைமை எழுதிக்கொடுத்த ஸ்கிரிப்டையே ஒப்புவித்தனர். ஆனால், இவ்வழக்கை விசாரித்த சி.பி.ஐ. 'கட்டாய மதமாற்றத்தால் லாவண்யா இறக்கவில்லை' என்று உயர்நீதிமன்றத்தில் அறிக்கை கொடுத்தது. மதுரை உயர்நீதிமன்றமும் கட்டாய மதமாற்றம் நடைபெறவில்லை என்றும் 'இதை வைத்து மலிவான அரசியல் செய்வது அயோக்கியத்தனம்' என்றும் தீர்ப்பளித்தது. இத்தனைக்கு பிறகும் தமிழக பா.ஜ.க. தாங்கள் செய்த இழிவான அரசியல் குறித்து சின்ன வருத்தம் கூட தெரிவிக்கவில்லை.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் பதற்றத்தை உருவாக்கவே இப்படியான விசாரணை குழுக்கள் அமைக்கப்படுகிறது தவிர,வேறு நோக்கம் இல்லை" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### நேர்காணல் எனும் பொன்னான நேரம்!

2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், பரமத்தி-வேலூர் தொகுதியில், போட்டியிடும் பொருட்டு விருப்ப மனு தாக்கல் செய்திருந்தேன். அதற்கான நேர்காணல் அன்றைய கழகத் தலைவர் தலைமையில், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. அப்போது, தொகுதி நிலவரம், நான் ஆற்றிய பணிகள், மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித்தெல்லாம் கேட்டறிந்து, வாழ்த்தினார் கலைஞர் அவர்கள். உடன் இன்றைய தலைவர் தளபதி அவர்கள், பேராசிரியர் அவர்கள், அண்ணன் துரைமுருகன் மற்றும் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர். வாழ்வின் பொன்னான தருணங்களில் இதுவும் ஒன்று.


பரமத்தி.
எஸ்.ரவிச்சந்திரன்

– பரமத்தி. எஸ்.ரவிச்சந்திரன், பரமத்தி வேலூர், நாமக்கல்.

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அறப்போரும் கழகமும்!

1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் வன்முறைச் சூழ்நிலை தலைதூக்கிய போது, நல்லுரையாற்றியும், தவறான பாதைக்குக் கிளர்ச்சி செல்லக்கூடிய போக்கினை மாற்றியும், அறப்போரின் நோக்கத்தை சிதைக்காமலும் காத்தது கழகம். அடக்குமுறைகளில் பலர் சுட்டுக்கொல்லப்பட்ட கொடுமையையும், சிலர் தீக்குளித்த நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சியையும் கண்டு, மேலும் கொடுமைகளைச் செய்திடாது தடுத்திட, மக்களின் கருத்தினைத் திரட்டி நிறுத்துவதில் வெற்றி கண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131